Thalaivaasal
...கள் பாரம்பரியம்
...் 97 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | ஜனவரி 11, 2021

## கணவன் - மனைவி மோதல்: கணவன் மீது துப்பாக்கி சூடு!

வவுனியா அரச முறிப்பில் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில், காயங்களுடன், ஆணொருவர் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில்

03








# மாணவர் போராட்டத்திற்கு முதல் வெற்றி

## இடிக்கப்பட்ட இடத்தில் தூபிகட்ட மீண்டும் அடிக்கல் நாட்டப்பட்டது

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி இடித்தழிக்கப்பட்ட நிலையில் , மீண்டும் அதே இடத்தில் தூபியினை நிறுவும் நோக்குடன் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசாவினால் நினைவுக்கல் நாட்டப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடித்தழிக்கப்பட்டது.

03



## வடக்கு, கிழக்கு முடங்கியது

யாழ் பல்கலைகழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் காரணமாக அனைத்து மாவட்டங்களும் முடங்கியுள்ளது.

03

## சென்னையில் இலங்கை துணைத்தூதரகம் முற்றுகை

03




## அமைச்சர் வாசுதேவவிற்கு கொரோனா தொற்று!



அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட

03

## பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளருக்கு கொரோனா உறுதி

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக

03

## பாராளுமன்ற கொத்தணி: 31 எம்.பிக்கள் தனிமைப்படுத்தலில்

கொரோனா தொற்று காரணமாக தனிமைப் படுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற கொத்தணியில் இதுவரை, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, ரஊப் ஹக்கீம் எம்.பி., அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகிய மூவர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களுடன் தொடர்புடைய பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் தொடரும் கனமழை இரணைமடுவின் 14 கதவுகளும் திறப்பு

**யாழில் 68 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவு**

வடமாகாணம் முழுவதும் இன்றைய தினம் கனமழை பெய்து வருகின்றது. இதனால் தாழ் நில பகுதிகளில் வாழும் மக்கள் வெள்ள அபாயத்தை எதிர்கொண்டிருக்கின்றனர்.

03




தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிப்பு:
# எதிர்த்து முடங்கிய தமிழர் தேசம்








யாழ்ப்பாணம் - படங்கள் ஐ. சிவசாந்தன்



கிளிநொச்சி




மன்னார்



ஏறாவூர்



மட்டக்களப்பு




வவுனியா



திருகோணமலை

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிப்பு: பின்னணியில் இந்தியா?

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் வருகைக்குப் பின்னர் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டமையானது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். அரியநேந்திரன் மேலும் கூறியுள்ளதாவது, "நல்லாட்சி அரசாங்கத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கம் குடும்ப ஆட்சியைதான் கொண்டு செல்கின்றது.

இவ்வாறு குடும்ப ஆட்சி நடைபெறுகின்றமையினால் பல்வேறுப்பட்ட அச்சுறுதல்கள் மற்றும் தடைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

பல்வேறுப்பட்ட நினைவுத் தினங்களை நடத்த முடியாத சூழ்நிலையே தற்போது காணப்படுகின்றது.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கைக்கு வருகைத்தந்து சென்ற மறுதினமே முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டுள்ளமையினால், அவர்களின் அதரவு இருக்கின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

சிலவேளை இருக்கலாம். இல்லையென்று கூறமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. இவ்வாறுதான் முள்ளிவாய்க்கால் நடைபெற்ற இறுதிப் போரில் கூட இந்தியாவின் பங்களிப்பு இலங்கை அரசாங்கத்துக்கு இருந்தது" என்றார்.

## மட்டக்களப்பில் 11 வயது சிறுமி சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு - களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து 11வயது சிறுமியின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பெரியகல்லாறு 02ஆம் குறிச்சி, நாவலர் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்தே குறித்த சடலம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சிறுமியின் தாயார் வெளிநாட்டுக்குச் சென்றுள்ள நிலையில் குறித்த சிறுமி சிறிய தாயின் வீட்டிலேயே இருந்து வந்துள்ளார்.

இந்த நிலையில், இரண்டு தினங்களுக்கு முன்னர் குறித்த சிறுமி அவரின் அம்மம்மாவின் வீட்டில் இருந்தபோது தாக்கப்பட்டதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சிறுமி கிராம சேவகரினால் மீட்கப்பட்டு கல்லாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் இருந்த சிறுமியை சிறுமியின் சிறிய தாயார் நேற்று முன்தினம் வீட்டிற்கு அழைத்துச்சென்றுள்ளார்.

இந்த நிலையிலேயே நேற்று காலை சிறிய தாயின் வீட்டில் இருந்து குறித்த சிறுமி சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சிறுமியின் மரணம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைகளுக்கு அகொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலும் சிறுமியின் மரணம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மாணவர் போராட்டத்திற்கு...

### போராட்டங்கள்

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சனிக்கிழமை காலை முதல் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரத போராட்டங்களை முன்னெடுத்தனர்.

தமிழகம் , வெளிநாடுகளின் பிரதிநிதிகள் பலரும் தமது கண்டனங்களை வெளிப்படுத்தி வந்ததுடன் , புலம்பெயர் நாடுகளில் உள்ளோரும் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இன்றைய தினம் திங்கட்கிழமை வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முஸ்லீம் தரப்புக்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் தமது பூரண ஆதரவை தெரிவித்துள்ளனர்.

### அதிகாலையில் மாணவர்களை சந்தித்த துணைவேந்தர்

இந்நிலையில் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களை இன்றைய தினம் திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் பல்கலை கழக துணைவேந்தர் நேரில் சந்தித்து, மீண்டும் அதே இடத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியைக் கட்டுவதற்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாக உறுதியளித்தார்.

### தடுத்து நிறுத்திய பொலிஸார்

அதன் பிரகாரம் காலை 7 மணியளவில் மாணவர்களுடன் பல்கலைக்கழத்தினுள் செல்ல முற்பட்ட போது பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் தடுத்து நிறுத்தினார்கள்.

அதனையும் மீறி துணைவேந்தர் மாணவர்களை அழைத்துக்கொண்டு வளாகத்தினுள் சென்று , பரமேஸ்வரன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து நினைவு தூபி இடித்தழிக்கப்பட்ட இடத்திற்கு மாணவர்களுடன் துணைவேந்தர் சென்ற போது அங்கு வந்திருந்த கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தடுத்து நிறுத்தினார்.

### கட்டுமான பணிகளை முன்னெடுக்கவில்லை.

அதன் போது , துணைவேந்தர் , நாம் தற்போது எந்த கட்டுமான பணிகளிலும் ஈடுபடவில்லை. தூபி இடித்தழிக்கப்பட்ட இடத்தில் கல் நாட்டப்போறோம். என்னுடைய மாணவர்கள் மூன்று நாட்களாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனை முடித்து வைக்க வேண்டிய நிலையில் உள்ளேன். எம்மை தடுக்காதீர்கள் என கூறி இருந்தார்.

அதனை அடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி நினைவிடத்திற்கு செல்வதற்கு அனுமதி அளித்தார்.

### தேவாரம் பாடி மலர் தூபி அஞ்சலி

நினைவிடத்திற்கு மாணவர்களுடன் சென்ற துணைவேந்தர் , தேவாரம் பாடி , மலர் தூபி நினைவு கல்லினை நாட்டினார். அதனை தொடர்ந்து மாணவர்களும் நினைவிடத்திற்கு மலர் தூபினார்கள்.

### மாணவர்களின் விபரங்களை பெற முயற்சி

அவற்றை முடித்துக்கொண்டு மாணவர்கள் பல்கலை வளாகத்தினுள் இருந்து வெளியேற முற்பட்ட போது . பல்கலை கழகத்தினுள் இருந்த பொலிஸார் நினைவிடத்திற்கு சென்று வந்த மாணவர்களின் விபரங்களை பதிய முற்பட்டனர். அதற்கு மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்த போது, தாம் கொரோனா நோய் தொற்று காரணமாக தான் பதிவுகளை மேற்கொள்கிறோம் என தெரிவித்தனர்.

தமது விபரங்களை பல்கலை வளாகத்தினுள் நின்று பொலிஸார் பதிவதனை மாணவர்கள் எதிர்த்தனர். அவ்வேளை அவ்விடத்திற்கு வந்த துணைவேந்தர் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் மாணவர்களை வெளியேற விடுமாறு பணித்தனர். அதனை அடுத்து மாணவர்களை வெளியற பொலிஸார் அனுமதித்தனர்.

### முடிவுக்கு வந்தது உண்ணாவிரத போராட்டம்

உண்ணாவிரத இடத்திற்கு வந்த மாணவர்களுக்கு துணைவேந்தர் கஞ்சி வழங்கி போராட்டத்தை முடித்து வைத்தார்.

## கணவன் - மனைவி...

அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா ஓமந்தை அரசமுறிப்பு பகுதியில் கணவன் மனைவிக்கு இடையில் இடம்பெற்ற சண்டையின்போது அங்கு வந்த குறித்த பெண்ணின் சித்தப்பாவினால் குறித்த பெண்ணின் கணவன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, குறித்த நபர் மீது விறகு கட்டையினாலும் சரமாரியாக தாக்குதல் நடாத்தியுள்ளார்.

இதனையடுத்து, இச்சம்பவம் தொடர்பாக அக்கிராம மக்களினால் ஓமந்தை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்துள்ளதுடன், குற்றத்திற்கு பயன்படுத்திய நாட்டு துப்பாக்கியையும் கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்து, சம்பவத்தில் காயமடைந்த 29 வயதான தேவராசா ஜெயசுதன் என்பவர் வவுனியா வைத்திய சாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## அமைச்சர்...

ரவூப் ஹக்கீமுடன் தொடர்பினை பேணிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலக பணியாளர் உட்பட 300 பேரிடம் ரெபிட் என்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சென்னையில்...

யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் இரவோடு இரவாக இடிக்கப்பட்டதை கண்டித்து இன்று திங்கட்கிழமை சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டமொன்று நடைபெற்றது.

இன்று திங்கட்கிழமை காலை போராட்டமானது சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு கண்டன ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

சென்னையில் இலங்கைத் தூதரகம் இருக்கக்கூடாது என இரண்டு மணி நேரம் போராட்டம் நடத்தப்பட்டது.

ஒன்றுகூடலைத் தொடர்ந்து இலங்கைத் துணைத்தூதரகத்தை முற்றுகையிடுவதற்கு வைகோ தலைமையில் ஏனைய கட்சித் தலைவர்களும் சென்றபோது காவல்துறையினர் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டோரைக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில்,மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ, தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கு...

புராதான நகரங்களில் பொதுச் சந்தைகள், மருந்தகங்கள், உணவகங்கள் என அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன, அரச போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் மாத்திரமே போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தன.

வங்கிகள் மற்றும் அரச நிறுவனங்கள் திறக்கப்பட்டிருந்த போதும் போது மக்கள் இன்றி காணப்பட்டன.

அத்தோடு பாடசாலைகள் நீண்ட இடைவெளிக்கு பின் ஆரம்பிக்கப்பட்ட போதும் மாணவர்களின் வரவில் மிக மிக குறைவாக இருந்தமையால் பாடசாலைகளின் செயற்பாடுகளும் முற்றாக பாதிக்கப்பட்டிருந்தன.

## வடக்கில் தொடரும்...

வளிமண்டலவியல் திணைக்களம் வடகிழக்கு மாகாணங்களுக்கு நேற்றைய தினம் சிவப்பு எச்சரிக்கை விடுத்திருந்ததுடன் வடமாகாணத்தில் சுமார் 150 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகும் எனவும் முன்னெச்சரிக்கை வழங்கியிருந்தது.

இந்நிலையில் வடக்கில் நேற்று இரவு தொடக்கம் கனமழை பெய்து வருகின்றது. இதேபோல் வவுனியா மற்றும் முல்லைத்தீவில் கனமழை பெய்துவரும் நிலையில், இரணைமடு குளத்திற்கான நீர்வரத்து சடுதியாக அதிகரித்ததை தொடர்ந்து இன்று நண்பகல் இரணைமடுக் குளத்தின் 14 வான் கதவுகளும் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

இதனிடையே யாழ்.மாவட்டத்தில் இன்று மட்டும் 68 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி பிரதீபன் கூறியுள்ளார்.

மாவட்டத்தில் இன்று காலையிலிருந்து மழையுடன் கூடிய கால நிலை காணப்படுகின்றது. இன்று காலை காலையிலிருந்து மாலை வரை 68.1மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்த பொறுப்பதிகாரி மேலும் 24 மணித்தியாலத்திற்கு இந்த மழையுடன் கூடிய காலநிலை தொடரும் எனவும் தெரிவித்தார்.

## பிரதமரின்...

நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் அவர் இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்திற்கு விஜயம் செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சி.சி.டி.வி. காணொளிக் கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு அவருடன் தொடர்புகளை பேணிய நபர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த நிலைமை காரணமாக நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு எந்த தடையும் இல்லை என்றும் வழக்கம் போல கடமைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல்: ஒருவருக்குக்கூட எதிராக குற்றச்சாட்டு இல்லை

இலங்கையில் ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்பான எவரும் இதுவரை நீதிமன்றின் மூலம் தண்டிக்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

இன்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, அமெரிக்காவில் மூன்று பேருக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

குறித்த தாக்குதல் இடம்பெற்றபோது நல்லாட்சி அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன என குறிப்பிட்ட அவர், தற்போது வெவ்வேறு காட்சிகளாக இருந்தாலும் இவற்றை மறுப்பதாக கூறினார்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கோ அல்லது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ருவான் விஜேவர்த்தன விற்கோ எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் எரான் விக்ரமரத்ன குறிப்பிட்டார்.

# வடக்கில் மாத்திரம் ஏன் நினைவு தூபி அமைக்க முடியாது?

வடக்கில் மாத்திரமின்றி தெற்கிலுள்ள பல பல்கலைகழகங்களிலும் நினைவு சின்னங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றேனும் இதுவரையில் அப்புறப்படுத்தப்படவில்லை. அவ்வாறிருக்கையில் வடக்கில் மாத்திரம் ஏன் நினைவு தூபி அமைக்க முடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வியெழுப்பியுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில், "பல்கலைக் கழக மாணவர்கள் தமது எண்ணத்திற்கு அமைய நினைவு சின்னங்களை அமைக்கின்றனர். தெற்கிலுள்ள பல பல்கலைக்கழங்களிலும் இதேபோன்று வேறு பல நினைவு சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றுகூட இது வரையில் இவ்வாறு உடைத்து தகர்த்தப்படவில்லை.

இறுதிகட்ட யுத்தத்தில் முள்ளிவாய்க் காலில் இடம்பெற்ற பேரவலத்தினை நினைவுகூரும் முகமாகவே மாணவர்களால் இந்த தூபி அமைக்கப்பட்டுள்ளது.

கடந்து இரண்டு ஆண்டுகளாகவே அந்த நினைவு தூபி அங்கு இருக்கிறது. அவ்வாறிருக்கையில் மிகவும் அவசரமாக அதனை அங்கிருந்து அகற்றுவதற்கான நோக்கம் என்ன?

தெற்கில் இதுபோன்று நினைவு தூபிகளை அமைக்க முடியும் என்றால் ஏன் வடக்கில் மாத்திரம் அமைக்க முடியாது? இலங்கை ஆசிரியர் சங்கம் என்ற ரீதியில் நாம் இதற்கு கடும் கண்டனத்தை வெளியிடுகின்றோம்" என மேலும் தெரிவித்தார்.

தலைவாசல்
எங்கள் பாரம்பரியம் Thalaivaasal

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்



### ஹீமோபிலஸ் இன்புளுவென்சா டீ வகை (Hib)

ஒவ்வொரு ஆண்டிலும் ஹீமோபிலஸ் இன்புளுவென்சா டீ வகை நோயின் உடனடிப் பாதிப்பு 3 மில்லியன் மக்களைத் தொற்றுகிறது. ஹீமோபிலஸ் இன்புளுவென்சா கொக்கோ பசிலஸ் என்னும் பக்ரீரியாவால் மனிதரில் மட்டும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு தொற்றுநோயாகும்.

தொற்றுள்ள ஒருவரின் சுவாசத்திலிருந்து வரும் சளித்தொற்று ஊடாக பரவுகிறது. சுவாசத் தொற்றுள்ள ஒருவரின் தும்மல், இருமல் ஊடாக சுகதேகி ஒருவருக்கு பரவுகிறது.

பிரதான அறிகுறிகளாக நியூமோனியா, மூளை மென் சவ்வு அழற்சி ஏற்படும். செப்ரிசீமியா, மூட்டுவாதம், இதய சுற்றுவரி அழற்சி போன்றன இந்நோயின் விளைவாக ஏற்படலாம். இந்நோய்கள் பிரதானமாக 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் ஏற்படும் இந்நோய் நிலைமைகள் 4 மாதம் தொடக்கம் 18 மாதம் வரையான குழந்தைகளில் ஏற்படும் போது பாதிப்பு ஆபத்தானதாகும். 3 மாதங்களுக்கு குறைவான குழந்தைகள் 5 வயதுக்கு மேற்பட்டவர்களில் இந்நோய் ஏற்படுவது மிகக் குறைவு.இத்தொற்று நோய் ஏற்படுவதை தடுக்கும் முறை தடுப்பூசி மருந்து ஏற்றுதல் மட்டுமேயாகும்.

இது இலங்கையில் ஐங்கூட்டு தடுப்பு மருந்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி
கோ.றஜீவ்

# சுகாதார பாதுகாப்புகளுடன் பாடசாலைகள் மீள ஆரம்பம்

மேல் மாகாணம் மற்றும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று (திங்கட்கிழமை) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார அதிகாரிகளின் பணிப்புரைக்கு அமைய மிகவும் பாதுகாப்புடன் பாடசாலைகள் இன்றைய தினம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு திறக்கப்படும் பாடசாலைகளில் 2-13 ஆம் வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கையானது முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேநேரம், மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தலில் உள்ள பாடசாலைகளில் இம்மாதம் 25ஆம் திகதி முதல் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்காக மாத்திரம் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்தில் பாடசாலைகளுக்கான முதலாம் தர மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் செயற்பாடுகளும் ஆரம்பமாகவுள்ளன.



சுகாதார பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் முன்னதாக கல்வியமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

மாணவர்கள் பாடசாலைக்கு வரும்போதும் பாடசாலைகளில் இருக்கும்போதும் பாடசாலைகளை விட்டு வெளியேறும் போதும் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு தொடர்ந்தும் முகக் கவசத்தை அணிந்திருப்பது அசௌகரியமாக இருக்குமானால் இடைவெளியை பேணும் சந்தர்ப்பங்களில் அதனை அகற்ற முடியும் என்றும் பாடசாலைக்குள் பிரவேசிக்கும் போதும் அனைத்து மாணவர்களினதும் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் ஒன்று சேர்வதை தவிர்ப்பதாக வகுப்பு மட்டத்தில் ஓய்வு நேரம் வழங்கப்பட வேண்டும் என்றும் மாணவர்கள் தமது வீடுகளிலிருந்து எடுத்து வரும் உணவு, குடிநீர் மற்றும் பாடசாலை உபகரணங்களை பரிமாற்றிக்கொள்ளக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூர இடைவெளியை பேணி, உடற் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். பிள்ளைகளின் மனநல சுகாதாரத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளின் அவசியம் குறித்தும் கல்வி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

# பதவி மோகத்திற்காகவே துணைவேந்தர் நினைவுத்தூபியை இடித்தார்

பதவி மோகத்திற்காகவே யாழ். பல்கலைத் துணை வேந்தர் நினைவுத்தூபியை இடித்தார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த ஊடக சந்திப்பில் யோகேஸ்வரன் மேலும் கூறியுள்ளதாவது, "2009 முள்ளிவாய்க் காலில் 
நடைபெற்ற அழிவுக்கு பின்னர் பல தமிழ் மக்கள் அநாதைகளாக்கப்பட்ட நிலையில், எங்கள் தமிழ் உயர் அதிகாரிகளும் பதவிமோகம் மற்றும் பதவியை தக்கவைக்கவேண்டும் என்பதற்காக தமிழர்கள் இதுவரைப்பட்ட துன்பியல்கள் உணர்வுகள் எல்லாம் மறந்து அரசாங்கத்துக்கு வால்பிடிப்பவர்களாக இருந்து கொண்டிருக்கின்றனர்.

இப்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறு அபிவிருத்தி வந்தால் போதும் அதற்கு அரசாங்கத்தின் கட்சியின் அரசியல்வாதிகள் தங்களுக்குள்ளே சண்டை போட ஆரம்பித்துள்ளனர். அதற்கு எதிர்க் கட்சி ஒருவரும் குரல்கொடுத்து வருகின்றார்.

அதேபோன்று யாழ்ப்பாணத்திலும் இவ்வாறே அரசாங்க கட்சியில் இருப்பவர்கள் தாங்கள் தான் அபிவிருத்தியை கொண்டு வந்தோம் என விளம்பரங்கள் செய்கின்றனர்.

ஆனால் இந்த யாழ்.பல்கலைக்கழகத்தின் நினைவு தூபி உடைப்பு விவகாரம் சார்பாக யாழ்.மாவட்டத்தில் இருக்கின்ற அமைச்சர் டக்ளஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன், தாங்கள் அதனை உடைக்க உத்தரவிட்டோம் என கூறவில்லை ஏன்?

அபிவிருத்திக்கு குரல்கொடுக்கின்ற நீங்கள், ஏன் இதற்கு பொறுப்பேற்க தவறுகின்றீர்கள். அதனை பகிரங்கமாக தெரிவியுங்கள் உங்கள் ஆதரவாலேதான் இந்த அரசாங்கம் செய்திருக்கின்றது. அல்லாவிடின் நீங்கள் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு அந்த உபவேந்தருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும்.

ஆனால், அவர்கள் செய்யமாட்டார்கள். அவர்கள் அரசாங்கத்துடன் பின்னியிருப்பவர்கள் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துன்பியல் தொடர்பாக ஒரு நினைவுச் சின்னமும் உருவாகக்கூடாது என இந்த அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் அவ்வாறான நினைவுச் சின்னம் இருப்பதாயின் அதை அழிப்பதற்கு முற்படுகின்றது.

ஜே.வி.பி கிளர்ச்சி ஏற்பட்டதன் பின்னர் ஜே.வி.பி.யினர் அந்த கிளர்ச்சியின் நினைவாக தங்களது போராளிகள் இறந்தமையை நினைவுகூர்ந்து சில பல்கலைக் கழகங்களில் நினைவு தூபியை அமைத்திருக்கின்றனர். அது உடைக்கப்படவில்லை. ஆனால் எங்களது உறவுகள் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்ததற்காக யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் நினைவு தூபியை அமைத்தால் அது உடைக்கப்பட வேண்டும்.

உண்மையிலே எமது தமிழ் மக்கள் பெரிய இனப்படு கொலைக்கு ஆளாகியிருக்கின்றனர். அதை எங்களுடைய அரசியல்வாதிகள் சிலரே எடுத்துச் செல்லுவதற்கு தவறுகின்றனர். இந்த இனப்படுகொலைக்கு நீதி வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றது என்பதை நினைவுபடுத்துவதில்



அவ்வாறான நினைவு தூபிகளும் எதிர் காலத்தில் உதவக்கூடியவை, பல்கலைக்கழக மாணவர்கள் அதைத்தான் நினைவு கூர்ந்தார்கள் அதைக்கூட உடைத்துவிட்டார்கள்.

உபவேந்தர் ஒரு தமிழர் அவரே தான் அதைச் செய்ததாக சொல்லுகின்றார். ஆனால் நாங்கள் அவ்வாறு உத்தரவிடவில்லை என இராணுவ தளபதி தெரிவிக்கின்றார்.

தமிழரின் கையைப் பிடித்து தமிழரின் கண்ணிலே குத்தியிருக்கின்றார்கள். எனவே வடக்கு கிழக்கு தமிழ் மக்களின், தமிழ் உணர்வை தமிழ் மக்கள் அழிக்கப்பட்டதன் நினைவை யாழ்.உபவேந்தர் தன்பதவி மோகத்திற்காக உடைத்திருக்கின்றார் என்பதை தமிழ் மக்கள் உணர்ந்திருக்கின்றனர்" என அவர் குறிப்பிட்டுள்ளார்